பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
02 02 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய பட்ஜெட் சமுதாயத்தின் அனைத்து தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கக் கூடியதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
2. தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யுமாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியை தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
3. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் 77 நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.
4. அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளுமாறு சீனா, கனடா, மெக்சிகோ நாடுகளை அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கேட்டுக்கொண்டுள்ளார்.
5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

<<<>>>

மத்திய பட்ஜெட் சமுதாயத்தின் அனைத்து தரப்பினருக்கும் அதிகாரம் அளித்து, இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த பட்ஜெட்டில் நடுத்தர வகுப்பினர் மற்றும் ஊதியம் பெறுவோர் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதையும் அவர் வரவேற்றுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் பாதுகாப்புத்துறைக்கு 6 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது, இந்தியாவை பாதுகாப்புத்துறையில் சுயசார்புடையதாக மாற்றுவதென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு பெரும் ஊக்கமளிப்பதாக உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்தியாவை அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்த முதன்மையான நாடாக மாற்றுவதென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை கொண்டதாக மத்திய பட்ஜெட் அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் 36 வகையான உயிர்காக்கும் மருந்துகளுக்கு சுங்க வரியில் இருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டிருப்பதையும் அவர் வரவேற்றுள்ளார்.

<<<>>>

மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகள் ஜவுளித்துறைக்கு ஊக்கமளிப்பதோடு, வருமான வரி செலுத்துவோருக்கும் பயனளிப்பதாக உள்ளது என்று தொழில்துறையினரும், தணிக்கையாளர்களும் தெரிவித்துள்ளனர்.
கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய ஜவுளி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் திரு. பி. கோபாலகிருஷ்ணன், இந்த பட்ஜெட் ஏற்றுமதி வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்கும் என்று கூறினார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள வருமான வரிச் சலுகைகள் நடுத்தர வகுப்பினருக்கும், ஊதியம் பெறுவோருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என தேனியைச் சேர்ந்த தணிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யுமாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியை தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு வரும் 5ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.
இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ளதால் அங்கு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.
பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரே மோடி அக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இன்று ஆர்.கே. புரம் பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.
அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராஜ்நாத் சிங்கும் இன்று பிரச்சாரம் செய்ய உள்ளார்.
ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அஜய் மாக்கன் உள்ளிட்டோரும் இன்று பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளனர்.
இந்நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு யாருடைய தலையீடும் இன்றி நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
இதுதொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் காவல்துறையினருடன் ஆலோசனை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா, கைவினைப் பொருட்கள் மற்றும் குடிசைத் தொழில் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கான சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

'ஒரு மாவட்டம் - ஒரு உற்பத்திப் பொருள்' திட்டத்தின்கீழ் இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி, நமது கலாச்சார பாரம்பரியத்தை விளக்கும் வகையில் அமைந்திருப்பதோடு புவிசார் குறியீடு பெற்ற 75 பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே இந்த கும்பமேளாவில் 77 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுத் தூதர்கள் உட்பட 118 வெளிநாட்டவர் நேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

<<<<>>>>

இந்திய ரயில்வே மின்மயமாக்கப்பட்டதன் நூற்றாண்டு விழா நாளை கொண்டாடப்பட உள்ளது.

கடந்த 1925ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் தேதி அப்போதைய மும்பை விக்டோரியா முனையத்தில் இருந்து குர்லா வரையிலான ரயில்பாதை மின்மயமாக்கப்பட்டு ரயில்கள் இயக்கப்பட்டன.

தெற்கு ரயில்வேயின் சென்னை கடற்கரை முதல் - தாம்பரம் வரையிலான மீட்டர்கேஜ் ரயில்பாதை 1931ஆம் ஆண்டு மின்மயமாக்கப்பட்டது.

இந்நிலையில் நூற்றாண்டு விழாவை ஒட்டி ரயில்வே சார்பில் நாளை வாக்கத்தான் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

புத்தக வாசிப்பு பழக்கம் நம்மை பண்பாளராக மாற்றும் என்பதால் அனைவரும் புத்தகங்களை வாசிக்க வேண்டும் என தமிழக அமைச்சர் திரு. மதிவேந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல்லில் மாவட்ட அளவிலான புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், புத்தகம் வாசிப்பதை ஊக்குவிக்க மாநில அரசு புதுமையான திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

இதன் ஒரு பகுதியாக மாவட்டம்தோறும் புத்தக கண்காட்சி நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலையில் உள்ள கைதிகள் புத்தகங்களைப் படித்து தங்களை மேம்படுத்திக்கொள்ள வாசிப்பு பழக்கம் உதவும் என்றும் திரு. மதிவேந்தன் தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளுமாறு சீனா, கனடா, மெக்சிகோ நாடுகளை அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நாடுகள் தத்தமது நாட்டவரை உடனடியாக திரும்ப அழைத்துக்கொள்ளாவிட்டால் அந்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகள் அமெரிக்காவை வலுவானதாகவும், பணக்கார நாடாகவும் மாற்றும் என்றும் திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

<<<<>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இப்போட்டி நண்பகல் 12 மணிக்கு தொடங்குகிறது.

---------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் பெங்கால் அணி பட்டத்தை வென்றது.

ரூர்கேலாவில் நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அந்த அணி, 4-3 என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

--------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி — கோவா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**